Registered as a News Paper in Ceylon . விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
Nationa Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 108

யாழ்ப்பாணம் வைகாசி 17 ரபீஉல் 6 திங்கட்கிழமை (31-5-71)

ஜோன்ஸன்
அவுட்போட் மோட்டர்
யந்திர உதிரிப்பாகங்கள்
(6-H. P. — 20-H. P.)
எம்மிடம்
இப்பொழுது
பெற்றுக்கொள்ளலாம்.
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
யாழ்ப்பாணம்வீதி, வல்வெட்டித்துறை.
போன்: 34

# கிராமப் பகுதிகளில் கைத்தொழில் பிரிவுகள்

## அரசாங்கம் நிறுவும்

கோட்டை, ஞாயிறு

கிராமப் பகுதிகளில் பல்வேறு கைத்தொழில் பிரிவுகளை அரசாங்கம் ஆரம்பிக்கவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை திட்டமிடல் அமைச்சு துரிதமாக மேற்கொண்டுள்ளது.

பிராந்திய அபிவிருத்திச் சபைகளின்கீழ் கிராமப் பகுதிகளில் இந்தக் கைத்தொழில் பிரிவுகள் ஆரம்பிக்கப்படவிருப்பதாக திட்டமிடல் அமைச்சின் நிரந்தரச் செயலாளர் பேராசிரியர் குணசேகரா தெரிவித்துள்ளார்.

225 கைத்தொழில் பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

கைத்தொழில் நெசவுநிலையங்கள் மோட்டார் உதிரிப்பாகங்கள் உற்பத்திநிலையம், ரப்பர்பொம்மைகள் இஞ்சி மிளகாய் போன்றவற்றில் தயாரகும் எண்ணெய்கள் நிலையம் போன்ற பல்வேறு கைத்தொழில் நிலையங்கள் இந்தப் பிரிவுகளில் அமையும்.

பிராந்திய அபிவிருத்தி சபைகள் கச்சேரிகளில்திட்டமிடல் குழுக்களை நிறுவியுள்ளது. விவசாயம் கடற்றொழில் அபிவிருத்தி சம்பந்தமாக 31 திட்டமிடல் செயல்குழுக்கள் நிறுவப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பிராந்திய அபிவிருத்திசபைக்கும் கைத்தொழில் பிரிவுகளை நிறுவுவதற்கு 2 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கைத்தொழில் நிலையங்களை நிறுவுவது சம்பந்தமான ஆலோசனைகள் பொது மக்களிடமிருந்தும் கோரப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கிராமத்துக்கும் ஏற்ப கைத்தொழில் நிலையங்கள் ஆரம்பிக்கப்படும்:

அதிகாரிகளுக்கும் மக்களுக்குமிடையில் மேற்படி திட்டம் தொடர்பாக நெருக்கிபிணைப்பு ஏற்படக் கூடிய விதத்தில் இந்தக் கைத்தொழில் நிலையங்கள் ஆரம்பிக்கப்படும் என்று பேராசிரியர் குணசேகர தெரிவித்தார்

கைத்தொழில் பிரிவுகளுக்கு 350 உதவி அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள் இவர்கள் இப்போது இதற்கு என பட்டதாரிகள் பயிற்சித்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றுவருகிறார்கள்.

## தம்பிரான் சுவாமிகள் தமிழகம் செல்கிறார்

யாழ்ப்பாணம் திங்கள் நல்லை ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் இன்று தமிழகம்செல்கிறார். விசேஷ அழைப்பை ஏற்றுச்செல்லும் இவர் அங்கு பல கோயில்களிலும் கதாகாலாட்சேபம் நடாத்துவார்.

## 24 மணி நேரத்துக்குள் மற்றொரு விமானக் கடத்தல்

நியூயோர்க், மே 30

அமெரிக்காவில் 24 மணி நேரத்துக்குள் இரண்டாவது தடவையாகவும் ஒரு போயிங் ஜெட்விமானம் பலவந்தமாகத்திசை திருப்பப்பட்டுள்ளது 69 பிரயாணிகளுடன் புறப்பட்ட இவ்விமானம் சாரசஸ்ஸிலிருந்து மியாமிக்குப் போய்க்கொண்டிருந்தபோது பலவந்தமாக கியூபாவுக்குக் கொண்டு போகப்பட்டது. இவ்விமானம் ஹவானாவில் தரையிறங்கியிருப்பதாகத் தெரிகின்றது. இவ்விமானத்தை யார் கடத்தியது என்பது தெரியவில்லை.

ஏற்கனவே முன்னுள் நியூயோர்க் பொலிஸ் அதிகாரி ஒருவர் போயிங் விமானம் ஒன்றைக்கடத்திச்சென்றார். விமானத்தைத்திருப் பித்தர வேண்டுமானால் பெருந் தொகைப்பணம் பணயமாக்கத்தரவேண்டும் என அவர் கோரினார். பணமாகக் கைத்து பணயத்தொகையைப் பெற்றுக்கொள்வதற்காக அவர் கீழே இறங்கிய போது பொலிசாரால் கைது செய்யப்பட்டார். இப்பொழுது அவர் நியூயோர்க்கிற்குத்திருப்பிக் கொண்டு வரப்பட்டிருக்கிறார்.

## வானொலி நிகழ்ச்சியில் மாற்றம்

கோட்டை, ஞாயிறு

ஜூன் 1-ந் திகதியிலிருந்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தேசிய சேவை ஒலிபரப்பு நிகழ்ச்சிகளில் சில மாற்றங்கள் செய்யப்படவுள்ளன

காலை நிகழ்சிகள் 6 மணிக்கு ஆரம்பமாகும் செய்திகள் காலை 6-30 மணிக்கு இடம்பெறும் காலை ஒலிபரப்பு காலை 6-30 மணிக்கு ஆரம்பமாகி காலை 8-15க்கு முடிவடையும் அடுத்த ஒலிபரப்பு காலை 11-30 ஆரம்பமாகி பிற்பகல் ஒரு மணிக்கு முடிவடையும்மற்றையபகல் இரவுச்செய்திகள் வழமை போல் நடைபெறும்.

## பருத்தித்துறை கொலைவழக்கு தீர்ப்பு

# 1-ம், 3-ம் எதிரிகளுக்கு தூக்கு! மற்றும் நான்கு எதிரிகள் விடுதலை

## உறவினர்கள் கதறி அழுதனர்

(நீதிமன்ற நிருபர் யோகி)

யாழ்ப்பாணம், திங்கள் பருத்தித்துறை கொலை வழக்கில் 1ம், 3ம் எதிரிகளுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. மற்றும்2ம், 4ம் 5ம், 6ம் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர். 15தினங்களாக நடைபெற்றவிசாரணையின் பின்னர் நேற்று நண்பகல் தீர்ப்பு வழங்கப்பட்டது

இவ்வழக்கு விசாரணை வடபகுதி அசைஸ் கோர்ட்டின் நீதியரசர் வின்சன் தாமோதரம் முன்னிலையில் நடைபெற்றது நேற்றுக் காலை நீதியரசர் உரை நிகழ்த்தியபின் ஜூரிசபையினர் தனிமையில்கூடிகளார் 1 மணி நேரம் மந்திராலோசனை செய்தபின் தமது முடிவைத் தெரிவித்தனர்

1ம் எதிரி கொலைக்குற்றத்திற்கும் கொலை முயற்சி குற்றத்திற்கும் குற்றவாளி என ஜூரி சபையினர் ஏகமனதாகத் தெரிவித்தனர் 3ம்எதிரி கொலைக் குற்றத்திற்குக்குற்றவாளி என்று ஜூரிசபையினர் 6-1ஆகப் பிரிந்து தீர்ப்பளித்தனர் 2ம் 4ம் 5ம் 6ம் எதிரிகள் எக்குற்றங்களுக்கும்குற்றவாளிகளல்லவென ஜூரிசபையினர் ஏகமனதாகத் தெரிவித்தனர்

இதைத் தொடர்ந்து நீதியரசர் 2ம் 4ம் 5ம் 6ம் எதிரிகளை விடுதலைசெய்தார் கொலைமுயற்சி குற்றத்திற்காக 1ம் எதிரிக்கு 10 வருட கடூழிய சிறைத்தண்டனையும் கொலைக்குற்றத்திற்காக மரணதண்டனையும் விதித்தார்

தீர்ப்பளிக்குமுன் 1ம்எதிரியிடம் காரணம் [illegible] காட்ட இருக்கிறதா என்று நீதியரசர் [illegible] ஆம் என்றார் என்னசொல்லப் போகிறீர்? என்க்கேட்ட போது "என் தங்கச்சிக்கும் தாயாருக்கும் நான்தான் பொறுப்பாளி அவ்வளவு தான்" என்றார் இதன் பின் மரண தண்டனை விதிக்கப்பட்டது

இங்கிருந்து கண்டிபோகம்பர சிறைக்கு கொண்டுசெல்லப்பட்டு 71ம் ஆண்டுஜூலை 5ம் தேதி திங்கட்கிழமை சிறைச்சாலை எல்லைக்குள் உயிர் போகும் வரை தூக்கிலிடப்படுவீர் எனத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டது

தீர்ப்பளிக்குமுன் 3-ம் எதிரியிடம் காரணம் ஏதாவது காட்ட இருக்கிறதா? என நீதியரசர் கேட்ட போது அவர் [illegible] ஆகியோர் என் பொறுப்பில் இருக்கிறார்கள் அவ்வளவு தான் என்றார். இதன்பின் 3-ம் எதிரிக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது இங்கிருந்து கண்டி போகம்பரச் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டு 71-ம் ஆண்டு ஜூலை 9 ம்திகதி வெள்ளிக்கிழமை சிறைச்சாலை எல்லைக்குள் உயிர்போகும்வரை தூக்கிலிடப்படுவீர் என தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டது.

தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் 1-ம் 3-ம் எதிரிகளின் உறவினர்கள் பெண்களும் ஆண்களுமாக நீதிமன்றத்திற்கு வெளியே கதறி அழுதார்கள். தீர்ப்பை அறிவதற்கு பெண்கள் உட்பட ஏராளமானோர் நீதிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் திரண்டிருந்தனர்.

இவ் வழக்கில் பருத்தித்துறையிலுள்ள கும்பாந்தறை என்ற இடத்தில் 69ம் ஆண்டு அக்டோபர் 13-ம் திகதி வேலுப்பிள்ளை செல்வரத்தினம், சின்னத்தம்பி ராஜதுரை கந்தசாமி பரமானந்தம், இராசதுரை தேவராசா, இராசதுரை துரைராசா. சிவக்கொழுந்து தற்குணராசா ஆகியோர் சட்டவிரோதமாக கூட்டம் கூடியதாகவும் கூட்டத்தில் பொதுநோக்கத்துடன் சுந்தரம் ரத்தினசிங்கம், கந்தையா தியாகராசா மற்றும் அவர்களுடன் வந்தவர்களையும் கொலை செய்யும் நோக்கத்துடன் வந்தார்களென்றும் அதே இடத்தில் அதே நேரத்தில் 1-ம் எதிரியான வேலுப்பிள்ளை செல்வரத்தினம். சுந்தரம் இரத்தினசிங்கத்தை சுட்டுக் கொலைசெய்ததாகவும் அதே இடத்தில் அதே நேரத்தில்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

தட்டெழுத்து யந்திரம்:
நல்ல நிலையிலுள்ள ரிரான்டேட் றெமிங்ரன் தட்டெழுத்து யந்திரம் விற்பனைக்குண்டு. செல்வராஜன், செட்டித்தறை, நெல்லியடி, கரவெட்டி.
3133

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலுள்ள 32-ம் இலக்க மேல் மாடி கடை விற்பனைக்குண்டு. தரகர் இல்லை. குமாரசாமி, இல. 16, இரத்தினவாசா, கல்லூரி வீதி, வண்ணார் பண்ணை.
3143

## தேவை

1. ஆண் மாணவதாதி:- வயது 18-35 கல்விப் பொதுத் தராதரப்பத்திரம் (சாதாரணம்) பரீட்சையில் தமிழ், கணிதம் அல்லது தூயகணிதம், சுகாதாரம், பௌதிகவியல் அல்லது இரசாயனம் அல்லது உயிரியல் உட்பட ஆகக்குறைந்தது 5 பாடங்களில் தேர்ச்சி பெற்றவராயிருத்தல் வேண்டும். அனுபவமுள்ளவர்களுக்கு விசேட மதிப்புண்டு.
இரக்காவலாளர்:- வயது 45 க்கு மேற்பட்ட தமிழ் வாசிக்க எழுதத்தெரிந்தவராயிருத்தல் வேண்டும். ஆங்கில அறிவும் விரும்பத்தக்கது. சமீபத்திற்பெற்றுக் கொண்ட இருநற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும் விண்ணப்பம் முடியுந் திகதி 10-6-71 பி. ப. 4-00 மணி. த. சிவலிங்கம், கௌரவ காரியதரிசி, தெல்லிப்பழை ஐக்கிய வைத்தியசாலை.
3144

## தேவை

அரியாலை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புடவைப்பகுதிக்கு முகாமையாளர் ஒருவர்தேவை விண்ணப்பங்கள் சங்கக் காரியாலயத்தில் 5-6-71 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

தகைமைகள்:-
(i) வயது 25—40க்கு மிடையில்
(ii) க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் சித்தி.
தெரிவுசெய்யப்படுபவர் ரூபா 1500/- ரொக்கப் பிணையும் ரூபா 5000/. பெறுமதியான ஆதனப் பிணையும் கொடுக்கவேண்டும்.
சம்பளம்:- ரூபா 1500/- 6X10+1X15 — 2400/- இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

வி. மயிலு
தலைவர்
அரியாலை ப. நோ. கூ
சங்கம் யாழ்ப்பாணம்.
30 5-197- 2818

பாஷையூர்

## அந்தோனியார் உற்சவம்

ஊர்காவற்றுறை, ஞாயிறு பிரசித்திபெற்ற கத்தோலிக்க ஆலயமான பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் ஜூன் முதலாம் திகதி ஆரம்பமாகி நடைபெறவிருக்கிறது.
13ந் திகதி திருச்சுருப கற்றுப் பிரகாரத்துடன் திருநாள் முடிவடையும்.

## கேள்விப் பத்திரம்

காரைநகர் சிவன்கோவில் ராசகோபுரம்

மேற்படி கோபுரத்தின் அத்திபாரம் போடப்பட்டிருக்கிறது. அத்திபாரத்திலிருந்து வியாழவரி முடியும் வரையிலும் கட்டுவதற்கும் கேள்விப்பத்திரங்களை விண்ணப்பிக்குமாறு கேட்கின்றேன். பாருகல்லுகள் துவாரபாலகர்கள் தரைக்கல்லுகள் முதலியன வவுனியாக் கருங்கல்லுகளில் வேலை செய்து மற்றவை சீமந்து கொங்கிறீற்றிலும் அச்சுக் கல்லுகளாலும் கோவிலில் வைக்கப்பட்டிருக்கிற பிளானின்படி செய்யவேண்டும். சாமான்கள் கொடுக்கப்படும். சகல வேலைகளையும் செய்து பிளான்ற்றரும்செய்து பிளானின்படி வேறு எவ்வித வேலையும்செய்ய வேண்டிய தன்மையில்லாத நிலபரத்தில் பாரம்கொடுத்தல் வேண்டும். குறித்தவேலையை எக்காலத்துக்குமுன் முடித்துக்கொடுப்பது என்பதை கேள்விப்பத்திரத்தில் காட்டவேண்டும். அக்காலத்துக்குள் கட்டாயமாகச் செய்யவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தில் திருத்தம் இல்லாது சொல்லிலும் இலக்கத்திலும் குறித்த விஷயங்களைக் காட்டி விண்ணப்பிப்பவரின் காகிதத்திற் சகல வேலைகளுக்கும் விண்ணப்பிப்பவர் தமது தொலைவையக் காட்டி பத்திரத்தை நிரப்பி 1971-ம் ஆண்டு ஆனி மாசம் 15-ந் திகதிக்கு முன் சீல் பண்ணப்பட்ட தபால் உறையில் கீழ்க் கண்ட விலாசத்துக்கு அனுப்பவேண்டும். குறித்த கோவிலின் திருப்பணிச் சபையின் நிருவாகசபையின் தீர்ப்பு முற்றானது. நிருவாக சபையால் ஏற்கப்பட்ட பத்திரத்தின் கேள்விக்காரன் நிருவாகசபை அறிவித்ததும் எவ்வித சுணக்கமுமில்லாது ஒப்பந்தம் முடிக்கவேண்டும். அவ்வண்ணம் செய்யத்தவறின் அவரின் கேள்வியை நிருவாக சபையார் தள்ளுபடிசெய்வார்கள்.

அ. நாகலிங்கம்
சம்பந்தர்கண்டி காரைநகர்
திருப்பணிச்சபையின்
நிருவாகசபையாரின்
2817 கட்டளைப்படி

# நந்தா விளக்குகள்




உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில் ஆறும் வகுப்பிற் பயின்று கொண்டிருந்தான் செல்வன் சிவகுமாரன். சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் எட்டாம் வகுப்பிற் பயின்று கொண்டிருந்தாள் செல்வி நந்தகுமாரி நந்தகுமாரியும் சிவகுமாரனும் ஒருதாய் வயிற்றில் பிறந்தவர்கள் ஒருவர்பின் ஒருவராக பூவுலகுக்கு வந்த இந்த இரட்டையர்கள் மரண காலத்திலும் ஒருவரை ஒருவர் தொடர்ந்தனர். ஒட்டிப்பிறவாத இந்த இரட்டையர்கள் சிவகதி சேர்ந்த தன்மை எவரையும் உருக்கவல்லது எதிர்பாராத விதமாக தீ விபத்தில் சிக்கிய இருகுழந்தைகளும் எப்படியும் தப்பிவிடவேண்டும் என்று ஊரே கடவுளை வேண்டியது பெற்றோர், உற்றோர், ஆசிரியர்கள் சகபாடிகள் யாவருமே „நீயல்லால் கதி இல்லை" என்று பரம்பொருளை வேண்டினர்.

பன்னிரண்டு வயது நிரம்பாத நந்தகுமாரியையும் பதினொரு வயது நிரம்பாத சிவகுமாரனையும் காப்பாற்ற யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி வைத்தியர்களும் ஊழியர்களும் எடுத்த முயற்சிகளும் கொஞ்சமல்ல. தந்தை தாமோதரனுக்கும் தாய் கமலாவுக்கும். அக்கா பிரேமாவுக்கும் இந்த உலகமே சுழன்றது.
ஆஸ்பத்திரி வார்ட்டில் அயலயலே கிடந்த சகோதரக் குழந்தைகளின் வாய்கள் முணு முணுத்தன. தம்பிக்குச் சுகமா' என்றாள் நந்தா. 'நந்தா இப்பெ முதுஎங்கே' என்றான் குமார். அவர்களின் உடல்களும் உள்ளங்களும் எப்படிக்கொதித்தனவோ அந்த டாக்டரின் குழாய்களுக்குத் தான் கொதிப்புத் தெரியும்

வலைகளில் அகப்பட்ட மீன் குஞ்சுகளைப்போல தயங்கிக்கொண்டிருந்த இக் குழந்தைகளை நிமிஷத்துக்கு நிமிஷம் கவனித்துவந்தார் டாக்டர் அம்மா. மனிதனது நோயைக் கண்டுபிடித்து ஏற்ற வைத்தியம் செய்து குணப்படுத்துகின்றார்கள் வைத்தியர்கள். அவர்கள் இந்த உலகில் கண்கண்ட தெய்வங்கள். உலகிலுள்ள எந்த வைத்தியரினாலும் மாற்ற முடியாத நோய் பிறவிநோய். பிறவி நோயை மாற்றி அருள்புரிபவரே வைத்தியநாதர் அந்த வைத்தியநாதர்தான் பரமபதியாகிய சிவபெருமான்

இருவர்கள் இருவரும் இப்பொழுது மகாவைத்தியநாதர் கைப்பட்டுவிட்டார்கள் அவர்களது ஆன்ம சாந்தியின் பொருட்டுப் பிரார்த்தனைகள் நடைபெறுகின்றன. சாவிலும் பிரியாத சகோதரர்களான நந்தகுமாரியும் சிவகுமாரனும் அருள் ஒளிவிடும் நந்தா விளக்குகள்

'சிவ சிவ'

## பால் பெறுவதில் கஷ்டம்

சுழிபுரம், ஞாயிறு வலிகாமம் மேற்குப் பகுதி மக்களின் தேவையைப் பூர்த்தி செய்து வந்த வலிகாமம் மேற்கு ஐக்கிய விற்பனைச் சங்கம் பால் விநியோகம் கொள்வனவு செய்வதை நிறுத்திக் கொண்டதைத் தொடர்ந்து பாவனையாளர்கள் கஷ்டமடைந்துள்ளனர். கோவில் தேவைக்குக் கூட பால் பெற முடியாது மக்கள் அவதிப்படுகின்றனர்.

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி காலை10-00 பி.ப;2-00
சிவாஜி கணேசன்
கே. ஆர். விஜயா
நடித்த
ராமன் எத்தனை ராமனடி

வின்ஸர்— யாழ்ப்பாணம்
காலை 10-30 பி.ப, 2-00
★ சிவாஜி கணேசன் ★ பத்மினி
நம்பியார் — சுந்தரராஜன் — தங்கவேலு
ஜெயலலிதா — மனோரமா
நடித்த
குருதட்சணை

நாகம்ஸ்சினிமா
சுன்னாகம்
காலை 10-30 மட்டும்
HELICOPTER SPIES
மாலை 3-15 க்கு
ஜெமினி - விஜயகுமாரி
நடித்த
எல்லோரும் இந்நாட்டு மன்னர்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily 4-30 p m Only
"THE PLAYERS"
காலை 10-30 பி ப 2 00
காந்தாராவ்-ராஜசுலோஜனு
நடித்த
பாட்டி சொன்ன கதை

வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30, பி, ப, 2-00 மணி
★ ஜெய்சங்கர்
★ வாணிஸ்ரீ
★ லக்ஷ்மி
நடித்த
கன்னிப் பெண்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி
காலை 10-30, பி. ப. 1-30
சிவாஜி-பத்மினி
நடித்த
ராஜா ராணி

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி
காலை 10-30, பி. ப. 2-30
ஜெய்சங்கர்—வாணிஸ்ரீ
நடித்த
நேர்வழி

கெப்பிட்டல்
காலை 10, பி.ப.2-00 மணி
எங்கவீட்டுப் பிள்ளை

றிங்ஸ்லி
காலை 10, பி.ப.2-00 மணி
நீதிக்குபின் பாசம்

ஶ்ரீமலன்
காலை 10, பி.ப.2-00 மணி
தொழிலாளி

பிளாஸா
காலை 10, பி.ப.2-00 மணி
எங்கவீட்டுப் பிள்ளை

REGAL (Jaffna)
Daily 10-30 a m 2-00 &
4-00 p. m.
Omar Sharif
in
M. G. M'S
THE APPOINTMENT
(Color)

ராஜா யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30க்கும் பி ப 2·00 மணிக்கும்


(புதிய கொப்பி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்குப் பாகிஸ்தான் நெருக்கடி

# யு. எஸ். - ஐ. நா. அசமந்தம்: செனட்டர் கென்னடி கண்டனம்

## தென் கிழக்காசிய அமைதிக்கே ஆபத்தென எச்சரிக்கை

நியூயோர்க், மே 30

**கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து ஐ. நா. சபையும் அமெரிக்க அரசாங்கமும் அசமந்தமாக இருந்துவருவது தென் கிழக்காசியாவின் அமைதிக்கே அபாயத்தைத் தோற்றுவித்திருக்கிறதென செனட்டர் கென்னடி அமெரிக்க அரசாங்கத்துக்கு அறிவுறுத்தியிருக்கிறார்.**

அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. ரோஜர்ஸிற்கு செனட்டர் கென்னடி எழுதியுள்ள ஒரு கடிதத்தில் கிழக்குப் பாகிஸ்தான் விஷயத்தில் அமெரிக்காவும் ஐ. நா. வும் செயற்படாமலிருப்பது குறித்து கண்டித்திருக்கிறார்.

அமெரிக்க செனட்சபையில் அகதிகள் சம்பந்தமான துணைக்கமிட்டியின் தலைவர் என்ற முறையில் திரு. எட்வர்ட் கென்னடி ராஜாங்க அமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

மிக நெருக்கடியான ஒரு சமயத்தில் அமெரிக்காவும் ஐ. நா. வும் செயல்படாமலிருப்பது தென் கிழக்காசியாவின் அமைதிக்கே ஆபத்தைத் தோற்றுவித்திருக்கின்றது. பாகிஸ்தான் அரசாங்கமும் கிழக்குப்பாகிஸ்தானிலிருக்கும் அரசியல் சக்திகளும் அங்குள்ள பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு அமெரிக்காவும் ஐ. நா வும் உதவமுடியும். இந்தியாவுக்குள் அகதிகள் பெருவாரியாக வந்து குவிவதைத் தடுப்பதும். ஏற்கனவே வந்துள்ளவர்கள் திரும்பிப்போவதற்கான சூழ்நிலைகளைத் தோற்றுவிப்பதும் சர்வதேச முயற்சிகளின் பிரதான நோக்கமாக இருக்க வேண்டும் என்று செனட்டர் கென்னடி வலியுறுத்தியிருக்கிறார்.

கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் நிவாரணத்துக்கான உதவிகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலேயே பாகிஸ்தானுக்கு உதவிகள் வழங்கப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

கிழக்குப் பாகிஸ்தான் விஷயத்தில் ஐ நா செயல்படாமலிருப்பதற்காக அமெரிக்கா பேசாமலிருக்கலாகாது என்று திரு கென்னடி தெரிவித்துள்ளார்.

## எரிபொருள் வழங்க தாய்லாந்து மறுப்பு

பாகிஸ்தான் ராணுவ விமானங்களுக்கு எரிபொருள் வழங்க தாய்லந்து மறுத்துள்ளது. பாகிஸ்தான் ராணுவ விமானங்களுக்கு எரிபொருள் வழங்க மறுத்துள்ள இரண்டாவது நாடு தாய்லந்து ஆகும். இவ்வாறு எரிபொருள் வழங்க மறுத்த முதல் நாடு பர்மாவாகும்.

சில தினங்களுக்கு முன் தாய்லந்திலுள்ள இந்திய தூதுவர் பெனர்ஜி தாய்லந்து பிரதமர் திரு கிட்டிகாசோர்னைச் சந்தித்து இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தியிடமிருந்து ஒரு கடிதத்தைக் கையளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### அகதிகள் மத்தியில் காலரா

இந்தியாவுக்குள் குடிபெயர்ந்து வந்துள்ள கிழக்குப் பாகிஸ்தான் அகதிகள் மத்தியில் "காலரா தொற்று நோய் பரவியிருப்பதாகவும் இதுவரை சுமார் 150 பேர் முகாம்களிலும் 300 பேர் ஆஸ்பத்திரிகளிலும் மரணமாகியிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

மேற்கு வங்காளத்திலுள்ள அகதிகளே பெரும்பாலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்களாம். இந்த அகதிகளைக் காப்பாற்றுவதற்கு இந்திய அரசாங்கம் பெருமுயற்சிகளை எடுத்து வருகிறது. அகதிகள் மத்தியில் தடுப்பு ஊசி ஏற்றும் பணி தீவிரப் படுத்தப்பட்டுள்ளது

கிழக்குப் பாகிஸ்தான் எல்லையில் இந்தியப்பகுதியை நோக்கி பாகிஸ்தான் படைகள் நேற்று பீரங்கித் தாக்குதல் நடத்தியதாகவும் இதில் ஒரு கிராமவாசி கொல்லப்பட்டதாகவும் இரு எல்லைப் பாதுகாப்புப் படையினர் காயமடைந்ததாகவும் இந்திய வானொலி அறிவித்தது. இந்தியத் துருப்புகள் பாகிஸ்தான் படைகள் மீது திருப்பித்தாக்கியதன்மூலம் பாகிஸ்தான் படைகளின் தாக்குதலை முறியடித்தார்களாம்.

### கருணாநிதி 25 ஆயிரம் ரூபா வழங்கினர்

தமிழ்நாட்டில் நிறுவப்பட்டிருக்கும் வங்காளதேச மக்களுக்கு உதவுவதற்கான நிதி சேர்ப்புக் குழுவின் கூட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி நேற்று ஆரம்பித்து வைத்தார். முதலமைச்சர் நிதியிலிருந்து வங்காளதேச நிதிக்கு திரு கருணாநிதி 25 ஆயிரம்ரூபா வழங்கினர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் 5 ஆயிரம் ரூபாவைத் திரு கருணாநிதி வழங்கினர்.

## மெரினர்-9 செலுத்துவதில் ஒருநாள் தாமதம்

கென்னடிமுனை, மே 30

செவ்வாய்க் கிரகத்தை நோக்கி நேற்று செலுத்தப்படவிருந்த மெரினர்-9 ஆளில்லா கலத்தில் ஏற்பட்ட தொழில் நுட்பக் கோளாறு ஒன்றின் காரணமாக அக்கலம் செலுத்தப்படுவது ஒருநாள் பின்போடப்பட்டது.

இன்று செலுத்தப்படவிருக்கும் இக்கலம் நவம்பர் மாதத்தில் செவ்வாய்க் கிரகத்தைச் சென்றடையும். ஏற்கனவே இம்மாத முற்பகுதியில் அமெரிக்கா அனுப்பிய மெரினர் கலம் ஒன்று கோளாறு காரணமாக பசுபிக்சமுத்திரத்தில் விழுந்துவிட்டது. இப்பொழுது செலுத்தப்படவிருக்கும் கலம் ஏற்கனவே சோவியத் யூனியனுல் செலுத்தப்பட்டுள்ள இரு கலங்களைப் போல் செவ்வாய்க்கிரகத்தைப்பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடும் இந்தசமயத்தில் செவ்வாய்க்கிரகம் மிகவும் சாதகமான நிலையிலிருப்பதால் அக்கிரகத்தை நோக்கி பல நாடுகள் கலம் செலுத்தி ஆராயத் தொடங்கியுள்ளன. இதைவிட இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு இக்கிரகம் இவ்வளவு சாதகமான நிலைக்கு வராதாம்.

## வெள்ளி கோபுரம்

சென்னை, மே 30

தமிழ்நாட்டு மக்களின் சார்பில் தமிழக முதல்வர் திரு. மு கருணாநிதி பதவியில் இருந்து ஓய்வுபெறும் கவர்னர் உஜ்ஜல்சிங்குக்கு "வெள்ளிக்கோபுரம்" ஒன்றை அன்பளிப்பாக வழங்கினர்.

சமீபத்தில் கவர்னருக்கும் அவரது மனைவியாருக்கும் ராஜாஜி மண்டபத்தின் அருகில் நடைபெற்ற பிரிவுபசார விருந்தொன்றிலேயே முதல்வர் வெள்ளியினுல் செய்யப்பட்ட தமிழக அரசின் கோபுர சின்னத்தைப் பரிசாக வழங்கினர்.

## மஹோற்சவம்

கோப்பாய், ஞாயிறு

கோப்பாய் சித்திரவேலாயுத சுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் ஆரம்பமாகியுள்ளது. [illegible] 7-ந் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும்

## ஐக்கிய ஐரோப்பாவைக் கட்டியெழுப்ப விருப்பம்

### பிரெஞ்சு அதிபருடன் நடத்தியபேச்சு; பிரி. பிரதமர் விளக்கம்

லண்டன், மே 28

ஐரோப்பிய பொதுச் சந்தை வாயிலாக ஒரு பலம் வாய்ந்த ஐக்கிய ஐரோப்பாவை கட்டி எழுப்ப பிரிட்டனும் பிரான்ஸும் விரும்புவதாக பிரிட்டிஷ் பிரதமர் திரு. எட்வேர்ட் ஹீத் பிரிட்டிஷ் மக்கள் சபையில் விடுத்த அறிக்கை ஒன்றில் கூறினர் தாம் பிரெஞ்சு ஜனாதிபதி பொம்பிடோவுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றி விளக்கிய திரு. ஹீத் பிரிட்டனுடன் நட்புறவையும் கூட்டுறவையும் வளர்த்துக் கொள்ள பிரெஞ்சுத்தலைவர்கள் பெரிதும் விருப்பம் காட்டியதாகத் தெரிவித்தார்.

பிரெஞ்சு ஜனாதிபதி பொம்பிடோவும் நானும் மொத்தம் 11 மணி நேரம் வரை பேச்சுவார்த்தைகள் நடத்தினேம். பேச்சுக்களின் இறுதிக்கட்டத்தில் பிரெஞ்சுப் பிரதமரும் எம்முடன் கலந்து கொண்டார் இப் பேச்சுக்களின்போது பலதரப்பட்ட விவகாரங்கள் குறித்து நாம் விவாதிக்க முடிந்தது.

"ஐரோப்பா சம்பந்தப்பட்ட சகல விவகாரங்களும் எமது பேச்சுக்களின் பிரதான அம்சமாக விளங்கிற்று. ஐரோப்பாவின் ஐக்கியம், அது உலகத்தில் வகிக்க வேண்டிய பங்கு, ஆகியன சம்பந்தப்பட்ட மட்டில் பிரிட்டிஷ் பிரெஞ்சு அரசாங்கங்கள் நெருங்கிய கருத்துக்களைக் கொண்டிருப்பதை அறியும் பொழுது மகிழ்ச்சியாக இருந்தது" என்று திரு. ஹீத் கூறினர்.

அவர்மேலும் பேசுகையில் விசாலமான ஐரோப்பிய பொதுச் சமூகத்தின் வாயிலாக ஒரு ஐக்கிய ஐரோப்பாவைக் கட்டி எழுப்புவதில் இரு அரசாங்கங்களும் ஆவல் கொண்டிருக்கின்றன என்பது இப்பேச்சுவார்த்தைகளின் போது புலனாகியதென்று கூறினர். வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளுக்கு எதிரான பாதுகாப்புக் கட்டணி ஒன்றை உருவாக்குவது நோக்கமல்ல எனக் கூறிய அவர் ஐரோப்பாவில் சமாதானத்தை உறுதிப்படுத்தவும் ஐரோப்பிய மக்களின் பொருளாதார சுபீட்சத்திற்கு வழி கோலவும் ஐரோப்பிய ஐக்கியத்தைப் பலப்படுத்துவதே சிறந்த மார்க்கமெனக் குறிப்பிட்டார்.

உலகத்தின் ஏனைய பிராந்தியங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் குறிப்பாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் சம்பந்தப்பட்ட மட்டில் ஐக்கிய ஐரோப்பா எதிர்காலத்தில் எத்தகைய பங்கு வகிக்க வேண்டுமென்பதில் ஒரே கருத்தையே தாமும் பிரெஞ்சு ஜனாதிபதியும் கொண்டிருந்ததாக திரு. ஹீத் தொடர்ந்து கூறினர் பிரிட்டனும் பிரான்ஸும் உட்பட்ட பரந்த ஐரோப்பிய பொருளாதார சமூகம் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்குப் பெரிதும் பயனை அளிக்குமெனவும் அவர் எடுத்துரைத்தார்.

ஐரோப்பிய பொதுச்சந்தையில் பிரிட்டன் அங்கத்துவம் பெறுவது சம்பந்தமாக பிரெஞ்சுத் தலைவருடன் தாம் நடத்திய சம்பாஷணை பற்றிக் குறிப்பிட்ட அவர் பிரிட்டன் பொதுச் சந்தையில்பிரவேசிக்கும்பட்சத்தில் இரு நாடுகளுக்கும் மத்தியில் நெருங்கிய அரசியல் கூட்டுறவு ஏற்படுவது சாத்தியமென்பதில் தாம் இருவரும் இணக்கம் கண்டதாகவும் தெரிவித்தார்.

## பதவி உயர்வு

அரியாலை, திங்கள்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் விவசாய ஆசிரியராக கடமைஆற்றிய ஆசிரியர் திரு. பொன்னம்பலம் கணேசமூர்த்தி வவுனியாத் தொகுதிக்கு விவசாயக் கல்வி அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவரது நியமனம் ஜூன் மாத நடுப்பகுதியில் இடம் பெறும் என நம்பப்படுகிறது.


## மே மாத சீட்டிழுப்புக்கான சாறி வவுச்சர்கள் விநியோகிக்கும் இறுதி திகதிகள்

குறைக்கப்பட்ட விசேட விலையான ரூபா 49/50க்கு சாறி ஒன்றைப் பரிசாகப் பெறுவதற்கு தகுதியுடையவர்கள் தங்களுக்குரிய சாறியைப் பெறுவதற்கு கீழ் குறிப்பிட்ட சீட்டிழுப்பு இலக்கங்களுக்கு எதிரேயுள்ள திகதிகளில் அல்லது அதற்கு முன்னர் டிக்கெட்டுகளைக் கையளித்து வவுச்சர்களைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

| | | |
|---|---|---|
| தேசிய லொத்தர் சீட்டிழுப்பு | இல: 345 | 6-6-71 |
| ,, ,, ,, | இல: 346 | 12-6-71 |
| ,, ,, ,, | இல: 347 | 18-6-71 |
| ,, ,, ,, | இல: 348 | 24-6-71 |
| ஜனசம்பத சீட்டிழுப்பு | இல: 26 | 29-6-71 |

தேசிய லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் மதுவிலக்கின் வரலாறு

தமிழ் நாட்டில் மது விலக்கின் தலைவிதி ஊசலாடுகிறது. தமிழ் நாட்டு அரசிலுள்ள சில தலைவர்களும் ஈ.வே ரா பெரியாரும் மது விலக்கை தளர்த்த வேண்டுமென்று விரும்புகிறார்கள். இந்தியாவிலுள்ள ஏனைய ராஜ்யங்களில் சில ஏற்கனவே இந்த நடவடிக்கையை எடுத்துள்ளன.

'பௌத்த தருமத்தை கடைப்பிடிக்கும் இல்வாழ்வான் எவ்வளவு போதை தரும் வஸ்துக்களை தானும் உபயோகிக்கப்படாது. பிறருக்கும் கொடுக்கலாகாது' என்பது பௌத்த விதிகளில் ஒன்று.

இதற்கிணங்க புத்தருடைய காலத்துக்குப்பின் பல நூற்றாண்டுகளாக மக்கள் மதுவை வெறுத்து ஒதுக்கி வந்தனர் அசோக சக்கரவர்த்தியும் பௌத்த விதிகளை பின்பற்றி ஒழுகினன். அலாவுதீன் கில்ஜி, ஔரங்கசீப், சுல்தானுராஸியா போன்ற பெரும் முஸ்லீம் அரசர்களும் மது விலக்கை ஆதரித்தார்கள். திப்பு சுல்தான் சட்டபூர்வமாக மது விலக்கை அமுல்நடத்தினார்.

மேனாட்டு ஐரோப்பியர்களே குடிப்பழக்கத்தை இந்தியாவில் புகுத்தினார்கள். இந்தியர்களில் சிலர் சந்தர்ப்ப வசத்தால் இதைப்பழக நேர்ந்த போதிலும் குடியை ஒழித்துவிட வேண்டுமென்ற எண்ணம் பலருடைய மனதில் உள்ளூர இருந்தது.

மதுவை விற்பனை மூலம் நிறைய வரிப்பணம் சம்பாதிக்கலாம் என்பதை அறிந்த பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் மது அருந்துவதை ஊக்கப்படுத்தினார்கள். மேலைநாட்டு குடிவகைகளையும் இறக்குமதி செய்வித்து அவற்றையும் இந்தியர் குடிக்கப்பழக்கினார்கள். 1790ம் ஆண்டு கலால் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

மதுபான வரிகளின் மூலம் 1875ல் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்திற்கு கிடைத்த வருமானம் 17,50,000 பவுண், 1905ல் இத்தொகை 58, 61,000 ஆகியது.

1890க்கும் 1900 க்குமிடையில் மது அருந்தும் பழக்கம் இந்தியாவில் அதிகரிப்பதைக் கண்டு அஞ்சிய இந்தியத் தலைவர்கள் ராஜாராம் மோகன்ராய் தலைமையில் பம்பாயில் பெருங்கிளர்ச்சி நடத்தி மது விலக்கு வேண்டுமென்று பிரசாரம் செய்தார்கள்.

1912ல் கோபாலகிருஷ்ண கோகலேயின் தலைமையில் இங்கிலாந்து சென்ற ஒரு தூதுகோஷ்டி இந்திய மந்திரியைக் கண்டு குடிக்கும் வழக்கம் இந்தியர்களின் வாழ்வு நெறிக்கு ஒவ்வாததென்றும், உடனே பூரண மதுவிலக்கு கொண்டுவரப்பட வேண்டுமென்றும் வற்புறுத்தியது.

1914ல் மகாத்மா காந்தி இந்திய அரசியல் அரங்கத்தில் பிரவேசித்த போது இந்திய சாம்ராஜ்யத்தின் முழு வருமானத்தில் கால்வாசிப் பங்கு மதுபானத்தில் பிரிட்டிஷாருக்கு கிடைத்து வந்தது. பழைய இந்திய பண்பாட்டிலிருந்து விலகியது தான் இந்தியர்கள் அடிமை மக்களாயிருப்பதற்கு மூல காரணம் என்பதை அவர் கண்டுபிடித்து அந்நிலையை குணப்படுத்துவதற்கு சத்தியம், அஹிம்சை, பிரம்மச்சரியம் ஆகிய மூன்றும் தேவையென விளக்கினார். பிரம்மச்சாரியம் என்பதன் கருத்து புலன் நுகர்ச்சிகளை தவிர்த்து தூய வாழ்க்கை நடத்துவது. மது அருந்துவதும் ஒரு புலன் நுகர்ச்சியே. 1921இல் பம்பாயில் நடந்த காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் நாட்டின் அபிவிருத்திக்கு தேவையான பதினொரு அம்சங்களில் மதுவிலக்கும் ஒன்றாய் இருக்கவேண்டுமென்பதை சுட்டிக் காட்டி அதை காங்கிரஸ் வேலைத் திட்டத்தில் சேர்ப்பித்தார். அன்று முதல் மதுவிலக்கு தேசிய முக்கியத்துவம் பெற்றது.

அன்னி பெசண்ட் அம்மையாரும் இந்தியாவிலிருந்து கிறிஸ்தவ பாதிரிமார் பெரும்பாலோரும் லோகமான்ய திலகரும் மதுவிலக்கு இயக்கத்துக்கு தங்கள் பூரண ஆதரவை நல்கினார்கள்.

காங்கிரஸ் தலைவர்களில் ராஜாஜி, பண்டிட் மதன மோஹன மாளவியா, மோதிலால்நேரு, கான் அப்துல்கபார்கான், ராஜேந்திர பிரசாத், சத்தியமூர்த்தி, சதானந்த முதலியோரும் இப்போராட்டத்தில் முழுமூச்சாக நின்றனர்.

1925க்கிடையில் சென்னை, பஞ்சாப், பம்பாய், வங்காளம், போபால், மைசூர், ஹைதராபாத் திருவாங்கூர் ஆகிய பிரதேசங்களில் பூரண மதுவிலக்கு இல்லாவிட்டாலும் மதுவிற்பனையும் மதுபானமும் பலபடி கட்டுப்படுத்தப்பட்டன.

1923இல் இந்தியா முழுவதும் கள்ளுக்கடை மறியல் நடந்தது. ஆயிரக்கணக்கான மதுவிலக்கு தொண்டர்கள் சிறை சென்றனர். காங்கிரஸ் பிரசாரத்தின் வேகத்தை தடுப்பதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் அடிக்கடி பல கமிஷன்களை நியமித்தது. ஆனால் அவையெல்லாம் வெறும் கண்துடைப்புகளாக முடிந்தன.

1927இல் மந்திரிசபைகள் அமைத்த காங்கிரஸ் சில காலமே பதவியில் இருந்தபடியால் மதுவிலக்கை அமுல் நடத்த முடியாது போய்விட்டது. பின்பு 1947ல் இந்தியா பூரண சுதந்திரம் பெற்று காங்கிரஸ் மீண்டும் ஆட்சிபீடம் ஏறியபோது மதுவிலக்கு முழுமூச்சாக அமுல் செய்யப்பட்டது.

தமிழ்நாடு (சென்னை) தான் முதன் முதலாக இதை புகுத்தியது. மாநிலம் மாநிலமாக மூன்று கந்தாயங்களில் மதுவிலக்கு கொண்டுவரப்பட்டு 1948-ம் ஆண்டு ஒக்டோபர் 2-ந் திகதி (காந்தி பிறந்த தினம்) தமிழ்நாடு முழுவதிலும் மது விற்பனையும் மதுபானமும் தடை செய்யப்பட்டது.

பின்னர் மஹாராஷ்டிரம் பஞ்சாப் மத்திய பிரதேசம் ராஜஸ்தான் மைசூர் கேரளம் ஆந்திரநாடு ஆகிய ராஜ்யங்கள் தமிழ்நாட்டைப் பின்பற்றின.

— வழிப்போக்கன்

## லொத்தர் சபை கட்டடத்துக்கு அடிக்கல்

கொழும்பு, ஞாயிறு

புதிதாக நிர்மாணிக்கப் படவிருக்கும் தேசிய லொத்தர்சபைக்கட்டடத்திற்கான அடிக்கல்லை நிதியமைச்சர் டாக்டர் என்.எம், பெரேரா கடந்தவாரம் நாட்டினார் இக்கட்டடம் கொழும்பு பார்சன்ஸ் வீதியில் அமைக்கப் படும்.

அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. எ, என், எஸ். குலசிங்கம் தேசியலொத்தர் சபைத்தலைவர் மேயர் அலெக்ஸ் ஜே சற். நவரட்னே ஆகியோரும் அடிக்கற்களை நாட்டினார்கள்.

மிக எளிமையாகக்கொண்டாடப்பட்ட இவ்வைபவத்தில் தொழில் இயக்குனர் திரு டி எம் டி [illegible] வரவேற்புரை நிகழ்த்தினார்

# பெண் ஒருவர் வெட்டிக் கொலை!
## தற்கொலை செய்துள்ள பேரனில் சந்தேகம்

சுழிபுரம், ஞாயிறு

சங்கானை மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் வடலியடைப்புக் கிராமத்தைச் சேர்ந்தபெண் நேற்றுக் முன்தினம் கத்தியால்வெட்டிக் கொலைசெய்யப்பட்டுள்ளார் கந்தையா கைம்பெண் வள்ளியம்மை என்ற பெண்ணே கொலையுண்டவராவர்.

கொலையுண்ட பெண்ணின் பேரன் முறையான விசுவலிங்கம் உமாபதிசிவம் என்ற இளைஞர் ஒருவரும் தனது கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார். மேற்படி பெண்ணின் கொலையில் இவரே சந்தேக நபர் என்று கூறப்படுகிறது கொலையுண்டவரின் வீட்டில் வேலைசெய்துவரும் நாகராணி இரத்தினம் என்பவர் அளித்த சாட்சியத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ள உமாபதிசிவம் கடந்த ஒருவாரகாலமாக தனது எஜமானியின் வீட்டுக்கு வந்துபோவதாகவும், வீட்டில் அவர் சாப்பிடுவது வழமை என்றும் கூறியுள்ளார்.

கொலையுண்டவரின் அருகில் கத்தியொன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது தற்கொலை செய்துகொண்டவர் மனநோயினால் பாதிக்கப்பட்டிருந்தார் என்றும் கூறப்பட்டது விசாரணை தொடர்கிறது இரண்டு சடலங்களையும் பொலிசார் காவல்புரிந்துவருகின்றனர்.

## பழச்செய்கையில் அபிவிருத்தி

கோட்டை, ஞாயிறு

பழச் செய்கையை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

இதற்காக 5 ஆண்டுகாலத் திட்டம்ஒன்றினை அரசாங்கம் தற்போது தயாரித்தும் வருகிறது. எனத் தெரியவந்துள்ளது இதன்மடி பழச் செய்கையில் ஈடுபடுவோர் நன்மையடைவர் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

பழங்களைப் பெருமளவில் உற்பத்திசெய்து வெளிநாடுகட்கு தகரத்தில் அடைத்து ஏற்றுமதி செய்வதற்கான வழிவகைகளை அமைப்பது பற்றியதும் இத்திட்டத்தில் அடங்கியுள்ளனஎனத்தெரிய வந்துள்ளது.

## அடையாளச் சின்னங்கள்

கோட்டை, ஞாயிறு

சுங்கப்பரிசோதகர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களின் பெயர், வகிக்கும்பதவிகள் பொறித்த அடையாளச் சின்னங்கள் வழங்க சுங்கத் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

இவ் அதிகாரிகள் தமது சேட்டில் அணிந்து இருக்க வேண்டுமென நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வெளிநாடுகளில் இருந்துவருபவர்களுக்கு சுங்க அதிகாரிகள் அதிக தொல்லைகொடுக்கிறார்கள் எனப் பலபுகார்கள் திணைக்களத்துக்குகிடைத்துள்ளன. இதனால் உல்லாசப் பயணிகள் இலங்கை வருவதற்கு வெறுப்படைவதாகவும் தெரிவித்ததினால் இத்தகைய ஏற்பாடுகளைக் கடைப்பிடிப்பதாகத் தெரிய வந்துள்ளது.

## சிகரட் புகைப்பதற்கு தடை

கோட்டை, ஞாயிறு

சுகாதார திணைக்களம் சிகரட் புகைபிடிக்கும் பழக்கத்தை நிறுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளது.

நாட்டில் சிகரட் புகைபிடிக்கும் பழக்கம் பெருகிவருகிறது என்றும் இதனால் இருதயம், இரத்தாசயம் ஆகியன மிகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டுள்ளதைத்தொடர்ந்து சுகாதார திணைக்களம் மேற்படி நடவடிக்கையை எடுக்கவுள்ளது

ஆஸ்பத்திரி மற்றும் பொது இடங்களில் சிகரட் புகை பிடிப்பதை நிறுத்த வேண்டுமென சுகாதார திணைக்களம் கேட்டுள்ளது இலங்கை போக்குவரத்துச் பஸ்களில் ஜூன் முதலாம் திகதி தொடக்கம் நிறுத்த இ போ ச நடவடிக்கை எடுக்கும் என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

## கடனுதவி கோரிக்கை


நியூயோர்க், மே 30

அமெரிக்காமற்றும் வெளிநாடுகளிடம் 825 கோடி ரூபா கடன் கொடுத்துதவுமாறு பாகிஸ்தான் அரசாங்கம் கேட்கிறது


புதிய ஹெடோநல் 'எம்'

40% எம். சி. பி. ஏ. மற்றும் சோடியம், பொட்டாசியம் ஆகிய உப்பு அடங்கிய களை கொல்லி.

பயிர்க் கொல்லி களை விட்டு வைக்காமல் வேரோ டொழிக்கும். உறுதியாக அதிக லாபம் தரும்




விளைபொருள்களே உறு துணை நின்று காக்கும் ஹெடோநல் 'எம்',

நெல், கரும்பு, சோளம், மற்றும் புற்றரைகளைப் பாதிக்கும் அகன்ற இலைக்களைகளையும், புதர்ச் செடிகளையும் செப்பமாகவும் சிக்கனமாகவும் ஒழித்துவிடும்.

பயிர்களையும் பண லாபத்தையும் பாதுகாக்கப் பாவியுங்கள் ஹெடோநல் 'எம்'.

நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள்—
பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள் !

மூலப் பொருட்சத்து உற்பத்தியாளர் : பேயர் ஜெர்மனி

இலங்கையில் தயாரிப்போர் : ஹேக்கெம் லிமிட்டெட் 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.




P-91246


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவர்களுக்கு சம்பள உயர்வு

சுழிபுரம், ஞாயிறு

அரசினர் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் தேர்ச்சி பெற்ற மருந்து கலவையாளர்களுக்கு சம்பள உயர்வும் பதவி உயர்வும் கிடைக்கவிருக்கிறது.

இது சம்பந்தமான சுற்றறிக்கை ஒன்று கடந்த வாரம் சுகாதார இலாகாவினால் அனுப்பப்பட்டுள்ளது. வருடம் ஒரு முறை சுகாதார இலாகாவினால் நடாத்தப்படும் மருந்து கலவை பற்றிய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையும் மருந்து கலவையாளர்களுக்கு இச்சம்பள உயர்வும் பதவி உயர்ச்சியும் அளிக்கப்படும். அரசினர் மருந்து கலவையாளர் சங்கம் இது சம்பந்தமாக நீண்டகாலமாக அரசினரைக் கோரி வந்தது குறிப்பிடத்தக்கது.

## புதிய நிர்வாகிகள்

அளவெட்டி, திங்கள்

அளவெட்டி, துறட்டைப்பிட்டி ஞானவைரவப்பெருமான் ஆலயத்தில் அகில இலங்கை சைவ குருமார் அர்ச்சகர் சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் புதிய உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்:

தலைவர் ஸ்ரீமத் க சிவலோக நாதக்குருக்கள், உபதலைவர் ஸ்ரீமத் க சிவபாதசுந்தரக் குருக்கள், காரியதரிசி திரு வ வெ. தவரத்தினம், உபகாரியதரிசி திரு கு. பாலசுப்பிரமணியம் தனாதிகாரி ஸ்ரீமத் தி மாணிக்கவாசகக் குருக்கள்.

## விசேஷ பூசை

மாவிட்டபுரம், ஞாயிறு

சனி மாற்றத்தால் இடர்படும் மக்களுக்கு சாந்தியளிக்கும்முகமாக நவக்கிரக ஹோமமும் மஹா மிருத்திஞ்சய ஓமமும் அடுத்த மாதம் 3-ம் திகதி கீரிமலை சிவன் ஆலயத்தில் நிகழவிருக்கின்றது

அடுத்த மாதம் 3-ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3-41 மணிக்கு சனி இடம் பெயர்வதால் கஷ்டப்படும் மக்கள் சாந்திபெறும் நோக்குடன் இந்த ஓமங்கள் அன்று நிகழவிருக்கின்றன

அன்று மாலை 3-30 மணி தொடக்கம் 'நகுலேஸ்வரரும் சனீஸ்வரரும்' என்னும் விடயம் பற்றி அருட்கவி சி விநாசித்தம்பி விசேட சொற்பொழிவு ஒன்றையும் நிகழ்த்தவுள்ளார்

## தமிழ்நாட்டில் ஆங்கிலமும் போதனமொழி

சென்னை, மே 30

தமிழ்நாடு பள்ளிகளில் மாணவர்கள் ஆங்கிலம் மூலம் பாடங்களைப்படிப்பதற்கு வசதி செய்துகொடுக்க மாநில அரசு ஒப்புக்கொண்டிருக்கின்றது.

ஆங்கிலத்தைப் போதனமொழியாகக் கொள்ள விரும்பும் மாணவர்களுக்கு அந்த வசதியளிக்கப்பட வேண்டும் என சமீபத்தில் தமிழ்நாட்டில் கிளர்ச்சியொன்று நடைபெற்றது தெரிந்ததே இக்கிளர்ச்சியைத் தொடர்ந்து இது பற்றி ஆராய்ந்து அறிவிப்பதற்காககமிட்டியொன்றை தமிழ்நாடு அரசு நியமித்தது. டாக்டர் லட்சுமண முதலியார் தலைமையில் நிறுவப்பட்ட இக்கமிட்டியின் சிபார்சுகளை தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டுள்ளதுடன் அதனை நடைமுறைப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுத்துவருகின்றது.

## இடமாற்றங்கள்

அரியாலை, திங்கள்

கொழும்பு தெமட்டக்கொடை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபராகக்கடமைஆற்றிய திரு அ. நாகரசா இம்மாதம் 15ம் திகதி முதல் மீசாலை விக்னேஸ்வர வித்தியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

அரியாலை, திங்கள்

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை உதவி நிர்வாக அதிபர் திரு ஏ பி சச்சிதானந்தம் கொழும்பு இரசாயனக் கூட்டுத்தாபனத்துக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

## தீர்மானம்

பருத்தித்துறை, ஞாயிறு

சிங்களவராகப் பிறந்து தமிழ்மொழியில் ஆர்வங்கொண்டு தமிழில் சிறுகதைகள் எழுதிவரும் திரு. எஸ். நாணயக்காரராவுக்கும், திருக்குறளை சிங்களத்தில் மொழிபெயர்த்த வண. கே. தம்பிரத்தின தேரோவுக்கும் ஒரு பொதுவரவேற்பளிக்க பருத்தித்துறை உடுப்பிட்டி கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கங்கள் தீர்மானித்துள்ளன. நாட்டின் நிலைமை மேலும் சீரடைந்தபின் இவ்வரவேற்பு நடத்தப்படவிருப்பதாக பருத்தித்துறை நகரசபை உப தலைவர் திரு. கே. சேனாதிராசா கூறினார்

## இன்றைய பலன்

வைகாசி மாதம் 17-ந் திகதி
31-5-71

மேஷம்: மற்றவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாவீர்கள், பெரிய மனிதரின் உறவு தாராளமாகக் கிடைக்கும். குறிக்கோளில் வெற்றியுண்டு.

ரிஷபம்: புதிய தொழில் குறித்து சிந்தனை உருவாகும். கூட்டுவியாபாரத்தால் முன்னேற்றமுண்டு, புதுமனை கட்டுவதிலும் சிலரது கவனம் திருப்பப்படலாம்.

மிதுனம்: பொருள் கைவிட்டுப்போகும். மற்றவர்களிடத்தில் சொல்லாமல் கேட்க நேரிடலாம். சிநேகித வழியால் சில தொல்லைகள் தோன்றிமறையும்.

கடகம்- செய்தொழிலில் தடுமாற்றநிலை தென்படும். வேண்டிய ஒருவரைப் பகைத்துக்கொள்ளநேரிடும். குடும்பத்தில் சிறுபிணி தலைதூக்கும் மனத்திடம் விரும்பத்தக்கது.

சிம்மம்- பொருளீட்டுவதில் புதியபாதையை வகுத்துக்கொள்ளுவீர்கள். கஷ்டங்கள் சில நிவர்த்தியாகும். வீட்டில் சுபகருமம் நடைபெறுவதற்கு இடமுண்டு.

கன்னி: இன்று அருளும் பொருளும் இணைந்து கிடைக்கும். தொழில்புரியும் இடத்தில் பாராட்டப்படுவீர்கள். சிறப்பான தினம்.

துலாம்: சிந்தனை அலைகள் மோதும். செய்தொழிலில் பதட்டநிலைதென்படும். அவசர முடிவின் மூலம் குறை கேட்க நேரிடும். உடல்நலத்தைப் பேணிக்கொள்ளவும்.

விருச்சிகம்- வேண்டிய அளவிற்கு இன்று வெள்ளிப்பணம் துள்ளும். புதிய நண்பர்களையும் தேடிக்கொள்வீர்கள் நீண்டநாள் கனவு இன்று நனவாகும்.

தனுசு: புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும். எடுத்த கருமத்தை முடிப்பதில் வெற்றியடைவீர்கள்.

மகரம்: அவசரக்கோலம் சிக்கலைத் தோற்றுவிக்கும். மனதில் விரத்தி தோன்றும். வீணான சிந்தனைகளினால் சோர்வுநிலை தென்படும்.

கும்பம்: எண்ணிய கருமம் கண்ணியமாக முடியும். இன்று களஸ்திரவழியால் பொருள்வரவும் உண்டு பெரியோர்கள் மதிப்பும் உண்டு.

மீனம் விஷப்பரீட்சையின் மூலம் விபரீதங்கள் விளையும் மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்க நேரிடலாம். இன்று சும்மா இருப்பதே சுகம்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

### உற்சவம்

சங்கானை, ஞாயிறு

சங்கானை வெல்லிக் முருகமூர்த்தி கோவில் வருடாந்த உற்சவம் சென்ற வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. அடுத்த மாதம் 6-ம் திகதி தேர்த் திருவிழாவும் மறுதினம் தீர்த்தோற்சவமும் நிகழும்

## வருடாபிஷேக விழா

கோப்பாய், ஞாயிறு

கோப்பாய் வீரபத்திர சுவாமி கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள நடராஜப்பெருமானின் வருஷாபிஷேக விழா சிவஸ்ரீ [illegible] தலைமையில் நடைபெற்றது.

# நாட்டு நலனுக்காக உழைத்த நல்லவர்

தோன்றிற் புகழொடு தோன்றுக என்றார் வள்ளுவப் பெருந்தகை. இவ்வாறு புகழோடு தோன்றி யாவரும் புகழத்தக்க வகையில் நாட்டுக்கு நல்ல பணியாற்றிக்கொண்டிருந்த என்ஜினியர் இரத்தினசிங்கத்தின் இழப்பு அவரது குடும்பத்துக்கு மட்டுமல்ல இன்றைய நிலையில் மேலும் அவரது சேவையை முக்கியமாக நாடி நின்ற நாட்டுக்கே பேரிழப்பாகும்.

கொழும்பு புகையிரத இலாகா சுப்பிரின்டனாகவும், என்ஜினியராகவும் கடமையாற்றியவர் திரு. இரத்தினசிங்கம். கடமையுணர்ச்சியும் திறமையுக் பொறுப்புணர்ச்சியும் ஒருங்கே வைரப்பெற்ற இவர் குறுகிய காலப் பகுதியில் நாட்டுக்காற்றிய சேவை அளப்பரியது. வடபகுதியின் மிகப் பெரிய புகையிரத நிலையமான யாழ் புகையிரத நிலையத்தைக் கட்டிமுடிக்க காரணமாகவிருந்தவர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் ஆரம்பமான ஏப்பிரல் மாதம் 5-ந் திகதியில் இருந்து அவர் இறக்கும் வரை ஆற்றிய சேவை அவரது சேவையின் உச்சகட்டம் என்றே கூறலாம். நாட்டில் ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலையில் கடமையே கண்ணாகத் தன் நலத்தை மறந்து நாட்டு நலனே தன்னலனாகக் கொண்டு கடந்த ஒருமாத காலமாக அவர் கடமையாற்றியுள்ளார்.

இதை 29-ந் திகதியன்று நடைபெற்ற இறுதிச்சடங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய இறுதிச்சடங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரமுகர்களது கூற்றில் இருந்தே அறிந்துகொள்ளலாம்.

இவ்விறுதிச்சடங்கில் கலந்துகொண்ட புகையிரதப்பகுதிப் பிரதம அதிகாரியான திரு. டி. சில்வா பேசுகையில், திரு. இரத்தினசிங்கம் கடமை உணர்ச்சிமிக்கவர். கடந்த ஒருமாத காலமாக அவர் இரவும் பகலுமாக ஊண் உறக்கமின்றிப் பணியாற்றியுள்ளார். அவரது இந்தக் கடின உழைப்பே அவரைப் பலிகொண்டுள்ளது. சேவையில் உள்ளவர்கள் இவரை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும் இவரது சேவையை இழந்துள்ள புகையிரதப் பகுதிக்கு ஈடு செய்ய இயலாத பேரிழப்பு இவரது மறைவாகும் எனக் குறிப்பிட்டார்.

இவரையடுத்து உரையாற்றிய புகையிரதப் பகுதித் தொழிற்சங்கத்தைச் சேர்ந்த திரு. பல்லேவல 'தொழிலாளர்கள் மேல் அன்பும் விசுவாசமும் உள்ளவர். ஒரு அதிகாரி தொழிலாளர்களுடன் எவ்வாறு பழகவேண்டும், எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு உதாரணமாகத் திகழ்ந்தவர் திரு. இரத்தினசிங்கம் எனக் கூறினார்.

(6- பக்கம் பார்க்க)

## நியமனம்



யாழ்ப்பாணம், திங்கள்

கோண்டாவிலைச் சேர்ந்த திரு. இ. பொ. குமாரசாமி ஆசிரியர் வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சினால் நல்லூர்த் தொகுதியிலுள்ள கூட்டுறவு மொ. வி. ஸ்தாபனம், லங்கா சதொச லிமிட்டெட், கூட்டுறவுச்சங்கங்கள், விற்பனவு வசதி இலாகா, கொள்வனவு இலாகா நடத்தும் கடைகள், டிப்போ நிலையங்களின் உத்தியோகப்பற்றற்ற பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வடபகுதி கூட்டுறவு விளைபொருள் கூ. வி. சமாசம், யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கங்களின் சமாசம் என்பவற்றின் அதிகார சபை அங்கத்தவராகவும் கோண்டாவில் ப. நோ. கூ. சங்கத்தலைவராகவும் நீண்டகாலமாக இவர் பணிபுரிந்து வருகிறார்.

யாழ்ப்பாணத் தமிழாசிரியர் சங்கத் தலைவராகவும், வட இலங்கை த. ஆ. சங்க நிர்வாகசபை உறுப்பினராகவும் அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தனாதிகாரியாகவும் அ. இ. த. ஆ. சகாய நிதிச் சங்கத் தலைவராகவும் சேவையாற்றுகிறார்.

அண்மையில் கூட்டுறவு புனரமைப்பின் கீழ் பதியப்பட்ட திருநெல்வேலி ப. நோ கூ சங்கத்தின் அதிகார சபை உறுப்பினராகவும் கூட்டுறவு ஆணையாளரால் நியமிக்கப்பட்டுள்ளார்.


* உறுதியானதும்
* நீடித்து உழைப்பதும்
* தன்னிகரற்றதுமான

"வைத்திலிங்கம்ஸ்"

இரும்பு - பித்தளை - மர ஸ்குறு ஆணிகளை

நீங்கள் வாங்குவதனுல்

ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள் என்பதை மறவாதீர்கள்.

தயாரிப்பாளர்:

என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்

இரும்பு வியாபாரிகள்

450, பழைய சோனக தெரு, கொழும்பு-12

தொலைபேசி: 33143—4

கிளை: 138, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 530


## அறிவித்தல்

### சீமேந்து விநியோகம்

1-6-71 தொடக்கம், 25 பைகளுக்கு மேற் தேவைப்படுவோர், காங்கேசன் சீமேந்துத் தொழிற்சாலை அதிபரிடம் நேரடியாக விண்ணப்பித்துச் சீமேந்து பெற்றுக்கொள்ளலாம். இதற்குரிய விண்ணப்பப்படிவம், காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை விற்பனவு அதிகாரியிடம் ரூபா 1/-க்குக் கிடைக்கும் ஒரு பை சீமேந்தின் தற்போதைய தொழிற்சாலை விலை ரூபா 10/50

25 பைகள் வரை தேவைப்படுவோர், பிரிவுக் காரியாதிகாரியின் (D. R. O) சிபாரிசுடன் அண்மையிலுள்ள கூட்டுறவுச்சங்கங்களில் தங்கள் தேவைகளைத் தொடர்ந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

அ. பிரான்சிஸ்,
பதில் தொழிற்சாலை அதிபர்.

காங்கேசன் சீமேந்துத் தொழிற்சாலை,
காங்கேசன்துறை,
30-5-1971.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தியோகமும் பட்டப்படிப்பும்

பல்கலைக்கழக கல்வியில் மேற்கொள்ளப்படும் மாற்றங்களில் பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களது தொகையை குறைப்பது பற்றி முக்கியமாக கருத்துக்கு எடுத்துக் கொள்ளப்படலாம். பல்கலைக்கழகக் கல்விக்குத் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர் தொகை அதிகமாகவேயுள்ளது என நான் ஏற்கனவே கூறியுள்ளேன். பல்கலைக்கழகக் கல்வியின் நோக்கம் உறுதியளிப்பதாகவும் சகல துறைகளிலும் வளர்ச்சியைத் தரக்கூடியதாகவும் இருக்கவேண்டும். பல்கலைக்கழகக் கல்வியில் சீர்திருத்தங்களைச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள முக்கியமான ஒரு காரணம் ஒரு சேவையை மேற்கொள்ள பட்டம்பெற்றுத்தான் இருக்கவேண்டும் என்றதொரு கருத்தை விலக்கும் நோக்கமாகும். தற்போது பட்டம் பெறுமல் பொறுப்புவாய்ந்த நல்லதொரு உத்தியோகத்தைப் பெறலாம் என ஒருவரும் எதிர்பார்க்கவியலாது. இதனால் ஒவ்வொருவரும் பல்கலைக்கழகத்துக்குப் போகவேண்டுமென நினைக்கிறார்கள் ஏன்? அறிவைப்பெறும் நோக்கத்தோடல்ல உத்தியோகம் ஒன்றைப் பெறுவதற்கு- 'பாஸ்போட்டை'- பட்டத்தைப் பெறுவதற்காகும்- இத்தகைய ஒரு நோக்கத்தால் கல்வி நிறுவனங்களும் பல்கலைக்கழகங்களும் மாணவர்களுக்கு கல்வியையும் சமய அறிவைவிருத்தி செய்வதற்கும் ஊக்கமளிக்காது எவ்வாறுயிலும் ஒரு பட்டத்தைப் பெறுவதற்கு ஊக்கமளிக்கின்றன இதனால் கல்வியின் தரம் குன்றுவதோடு மட்டுமல்லாமல் பல்வேறு விதமான சீர்கேடுகளும் மாணவர்களைப்பட்டம்பெற ஊக்குவிக்கின்றன. ஆனால் மாணவர்கள் கல்வியின் உண்மையான நோக்கத்தை மறந்து பட்டத்தைப் பெறுவதிலேயே கவனம்செலுத்துகிறார்களேயன்றி அப்பட்டத்தைப் பெறுவதற்கான வழிவகைகளைப் பற்றிச் சிந்திக்கிறார்களில்லை. இத்தகைய தொரு சூழ்நிலையில் மாணவர்கள் கூடியவீத சித்தியை வற்புறுத்திக் கேட்பதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை. பல்கலைக்கழகங்களும் தரத்தைப்பற்றிக் கவனிக்காது தெரிந்தோ தெரியாமலோ பல்வேறு பரீட்சைகளிலும் சித்திபெறுவோரின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளன. இதனால் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதிலும் பரீட்சைகளை நடாத்துவதிலும் அசமந்தம் காணப்படுகிறது.

இவ்வாறு பல்வேறு கோணத்திலும் ஆராய்ந்த பின்னர் உயர்கல்வி அளிக்கும் உத்தியோகங்கள் தவிர மற்றும் அரசாங்க சேவையில் நியமனம் பெறுவதற்கு பட்டம் பெற்றிருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை என்ற முடிவுக்கு நான் வந்துள்ளேன். ஆனால் மருத்துவர் பொறியியல் நிபுணர், ஆசிரியர் ஆகியோருக்கு பட்டம் கட்டாயம் வேண்டும் என்பதை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். இவர்கள் தாங்கள் ஒவ்வொருவரும் மேற்கொள்ளும் துறையில் பலவருடங்கள் நல்லமுறையில்விரிவான போதனையும் பயிற்சியும் பெறவேண்டும் இவை இவர்கள் குறிப்பிட்டதங்கள் கடமையைச் செவ்வனே செய்ய இன்றியமையாதனவயாகும் இத்தகைய சில உத்தியோகங்கள் தவிர மற்றைய உத்தியோகங்களுக்கு பட்டம் தேவையென்பதற்கு எந்தவிதமான நியாயமான காரணங்களும் இல்லையென்றே நான் கருதுகிறேன்.

— மௌலானா அசாத்.

## லண்டனில் நடைபெறவிருக்கும் "இஸ்லாமிய உலக விழா"

லண்டன்,மே.30

இஸ்லாமிய உலகில் கல்வி, கலை கலாச்சாரங்களைச் சித்தரிக்கும் விழாவொன்று, இவ்வருட இறுதியில் லண்டனில் நடைபெறவிருக்கிறது. 'இஸ்லாமிய உலகம்' என்ற இக் கலாச்சார விழா பதினேழு நாட்கள் தொடர்ச்சியாக இடம்பெறும் மேலை நாடுகளில் இது போன்ற விழா என்றுமே இதுவரை இடம் பெறவில்லை என்று கருதப்படுகிறது.

இவ்விழா பற்றிக் குறிப்பிட்ட கீழைத்தேய கலா நிறுவனத்தின் செயலாளரான திரு. போல் கீலர், கீழைத்தேசங்களின் கலை, கலாச்சாரங்களை அறிந்துணர்ந்து, அவற்றைப் போற்றிப் பாராட்டும் மனப்பாங்கு இன்று மேற்கில் அதிகரித்து வருவதாகவும் அதனை முன்னிட்டே நாம் இவ்விழாவை ஒழுங்கு செய்வதாகவும் குறிப்பிட்டார். இவ்விழாவில் துருக்கி உட்பட அராபிய உலகத்தைச் சார்ந்த பல பிரபல சங்கீத விற்பன்னர்கள் இசை நிகழ்ச்சிகளை நடத்துவார்கள். இஸ்லாம்-அதன் மதம், தத்துவம், இலக்கியம், கட்டிடக் கலை, ஓவியக்கலை மற்றும் அதனுடன் சார்ந்த கலைகள் பற்றிய விரிவுரைகளும் கருத்தரங்குகளும் இவ்விழாவில் இடம்பெற விருக்கின்றன.

'இஸ்லாமிய நாடும் கலைத்துறையில் அதன் பங்கும்' என்ற நான்கு நாள் கருத்தரங்கு இவ்விழாவின் முக்கிய அம்சமாக அமையும். இதில் இஸ்லாமிய கல்வித் துறையில் ஈடுபட்டிருக்கும் பிரபல கல்வியறிஞர்கள் பங்கு பற்றுவார்கள்.

இலங்கை [illegible] 1971-ம் ஆண்டு மே மாதம் 31-ம் திகதி [illegible]

......

அமைச்சர் ஜெனமன்

## வடமராட்சிக்கு விஜயம் செய்வர்

பருத்தித்துறை, ஞாயிறு

வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் தமது வடபகுதி விஜயத்தின் போது அம்பலன்வெளிப் பகுதிக்குச் சென்று அங்கு அமைக்கப்பட்ட மீனவருக்கான வீடுகளைப் பார்வையிடுவதுடன், நிலமற்ற சிறுபான்மைத் தமிழருக்கு வீடுகள் கட்டுவதற்கான ஒழுங்குகளையும் செய்யவிருக்கிறார். இப்பகுதி நிலப்பரப்பில் பெரிதாக இல்லாததோடு இதிலும் குடிநீர் வசதிகளற்றிருப்பதால் பல மீனவர் குடும்பங்கள் இப்பகுதியிலிருந்து வெளியேற இருப்பதாகத் தெரிகிறது. இக் குடும்பங்களுக்கு [illegible] அளிப்பதுபற்றியும் பொதுவாகச் சிறுபான்மைத் தமிழர் குடும்பங்களைக் குடியிருத்துவது பற்றியும் அமைச்சர் ஆராய விருக்கிறார். இத்துடன் தன்னாலை ஆட்டுப்பட்டிப் பகுதியில் குடியேறியுள்ள இருபான் [illegible] விடுப்பதாகத் தெரிகிறது.

## டாக்டர் ஹூஸாக் மீண்டும் தெரிவு

பிராக், மே 30

செக்கோஸ்லாவாக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக டாக்டர் ஹூஸாக் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். 1969-ம் ஆண்டு திரு. டூப்செக்கிற்குப் பதில் டாக்டர் ஹூஸாக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் காரியதரிசியாகத் தெரிவுசெய்யப்பட்டார்

......

## நாட்டு நல...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மறைந்த திரு. இரத்தினசிங்கம் வடபகுதிக்குச் செய்த சேவை குறிப்பாகக் குறிப்பிடத்தக்கதொன்றாகும் கழகும், கிளிநொச்சி முள்ளியவளை ஆகிய இடங்களில் புகையிரத நிலையத்தை நிர்மாணிப்பதில் முக்கிய பங்கு கொண்டவர்களில் இவரும் ஒருவர். இதை நாம் மறக்கவியலாது என யாழ். மேயர் திரு. ஏ. ரி. துரையப்பா பேசுகையில் தெரிவித்தார்.

இறுதியாக திரு. இரத்தினசிங்கத்தின் குடும்பத்தினரின் சார்பில் திருமதி இரத்தினசிங்கத்தின் சகோதரியின் கணவரும், வடபகுதி பொலிஸ் அதிபருமான திரு. ஆர். சுந்தரலிங்கம் நன்றி தெரிவித்துப் பேசுகையில், விசேஷமாக கொழும்பில் இருந்து வந்து என்ஜினியரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட நூற்றுக் கணக்கான சிங்கள ஊழியருக்கும் அதிகாரிகளுக்கும், மற்றும் அங்கு குழுமியிருந்த பெருந்தொகையான மக்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாகப் பெருமளவில் சிங்கள மக்கள் கலந்து கொண்டது திரு. இரத்தினசிங்கத்தின் இறுதிச் சடங்கிலேயாகும். 700க்கு மேலான புகையிரதப்பகுதி ஊழியர்கள் இவ்விறுதிச் சடங்கில் கலந்து கொண்டனர்.

புகையிரதப்பகுதி பொது முகாமையாளர் திரு. வி. ரி. நவரத்தின பொலிஸ் அதிபருக்கு அனுப்பியுள்ள அனுதாபச் செய்தியில் 'கடந்த 11 மாதங்களாக அவர் எனக்குக் கீழ் கடமையாற்றியுள்ளார் ஓய்வின்றி இரவு பகலாக உழைத்த அவரது மறைவு நாட்டுக்கு ஈடு செய்ய இயலாத இழப்பாகும் ஏப்ரல் 5ம் திகதியில் இருந்து இறக்கும் வரை அவர் செய்த சேவை புகையிரதப் பகுதியால் மறக்க இயலாததாகும். புகையிரதப் பகுதியிலுள்ள ஊழியர் யாவருக்கும் இவர் முன்மாதிரியாகத் திகழ்ந்தார்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு யாவராலும் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரித்தாய் விளங்கி நாட்டுக்குச் சேவையாற்றி, ஆற்றிய சேவை முற்றுப்பெறுமலேயே அகால மரணமடைந்த திரு. இரத்தினசிங்கத்தின் மறைவு அதனால் வருந்தும் அவரது குடும்பத்தாருக்கும் அவர் சேவையை இழந்து நிற்கும் நாட்டிற்கும் ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும்.

—கே.ஜி

## அன்னதானம்

அரியாலை, திங்கள்

விளைவேலி விவசாயிகள் நலன் பேணு சங்கத்தினரின் அன்னதானம் சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினரான திரு. வி என் நவரத்தினம் தலைமையில் நடைபெற்றது

கூட்டுறவுப் பயிற்சி

## இறுதிபரீட்சையில் சித்தியடைந்தோர்

மாவிட்டபுரம் ஞாயிறு

யாழ் கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலையில் 1970-ம் வருடத்தில் உயர்பிரிவில் 9 மாதப் பயிற்சிமுடித்து செப்டம்பரில் இறுதிப் பரீட்சையில் தோற்றியவர்களின் முடிவுகள் நேற்றுவெளியாகியுள்ளன.

மேற்படி கலாசாலை சாதாரண கனிஷ்ட பிரிவுப் பரீட்சை முடிவுகள் ஏற்கனவே வெளியானது குறிப்பிடத்தக்கது.

இம்முறை உயர்பிரிவில் 1ம் பிரிவில் எவரும் சித்தியடையவில்லை மற்றும் பிரிவுகளில் சித்தியடைந்தவர்களின் விபரம் பின்வருமாறு

2-ம் பிரிவு- அருணாசல ஐயர், செல்வி வி. கனகசபை.

3-ம் பிரிவு- ஸி. இராஜரத்தினம்

நானசித்தி- ரி. சச்சிதானந்தன் கே. சிவபாதம், எஸ். சுப்பிரமணியம், எம். புவனேஸ்வரன், செல்வி வி. மதிவதனி, செல்வி எஸ் லீலாவதி, செல்வி கே ராஜேஸ்வரி செல்வி எம். மங்கையர்க்கரசி.

## 3 தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

கடந்த வியாழக்கிழமை டாக்டர் பிலிப் தலைமையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது

கூட்டத்தில் திரு இராமையா கொண்டுவந்த மூன்று தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன தீர்மானங்கள் பின்வருமாறு:

■ ஆஸ்பத்திரிக் குழு நிர்வாகிகள் எந்த 'வார்ட்'டிலும் பார்வையிடும்போது குற்றச்சாட்டுகளை உடன் அறிவிக்க தொலைபேசி வசதி எல்லா இடங்களுக்கும் அளிக்கப்படவேண்டும்

■ நோயாளிகளுக்கு கொடுக்கப்படும் உடுப்புகள் சுத்தமாக வெளுக்கப்பட்டுள்ளனவா என்று சுகாதார அதிகாரி மேற்பார்வையிட வேண்டும்.

■ மேற்பார்வையாளர் குற்றச்சாட்டுக்களை சுட்டிக் காட்டுவதற்காக ஒவ்வொரு வார்ட்டிலும் ஒரு குறிப்புப் புத்தகம் வைக்கப்படவேண்டும்.

## 1-ம் 3-ம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

1-ம் எதிரியான வேலுப்பிள்ளை செல்வரத்தினம் குறித்த சுந்தையா தேவராசாவை சட்டவிரோத கூட்டத்தின் பொது நோக்கத்தின்படி கொலை செய்ய முயற்சித்ததாகவும் அதே இடத்தில் அதே நேரத்தில் 6 எதிரிகளும் சுந்தரம் இரத்தினசிங்கத்தை கொலை செய்ய முயற்சித்தார் என்றும் அதே இடத்தில் அதே நேரத்தில் 6 எதிரிகளும் சுந்தையா தேவராசாவை துவக்கினால் சுட்டுக் கொலைசெய்ய முயற்சித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1-ம் எதிரி சார்பில் அட்வகேட் இ. கமலநாதன் புரக்டர் வி. பி. சுந்தரலிங்கம். புரக்டர் ஜே. சின்னத்தம்பியின் அனுசரணையுடன் ஆஜரானார்கள். 2-ம், 4-ம் 5-ம் எதிரிகள் சார்பில் அட்வகேட் ஜே. ஏ பி செரிபீம் புரக்டர் வி. செல்லத்தம்பி புரக்டர் என். நடராசா, புரக்டர் வி. இராமச்சந்திரன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். 3-ம்எதிரி சார்பில் வழக்கறிஞர் பூபாலன் ஆஜரானார், 6-ம்எதிரி சார்பில் வழக்கறிஞர் கே. இரத்தினசிங்கம் ஆஜரானார். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் பூபாலன் நியமிக்கப்பட்டிருந்தார், முடிக்குரியதரப்பில் அட்வகேட் சந்திரசேகரா ஆஜரானார்.

## இலங்கை விஜயம்

கோட்டை, ஞாயிறு

செயற்கைக்கோள் தொலைபேசி நிலயம் ஒன்றை அமைக்க ஏற்படும் செலவுகள் பற்றிய இறுதி மதிப்பீட்டைச் செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியைச் சேர்ந்த ஒரு தூதுக் கோஷ்டி இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது.

இத்தூதுக்கோஷ்டிக்கு வங்கியின் திட்ட நிர்வாகி திரு ஹாகராதலைமை தாங்குகிறார்.

## ஜோர்டானில் மீண்டும் மோதல்

அம்மான், மே.30

ஜோர்டானில் கொரில்லாக்களுக்கும் அரசாங்கப் படைகளுக்குமிடையில் மீண்டும் மோதல்கள் ஏற்பட்டுள்ளன. அரசாங்கப் படைகளே தங்கள் முகாம்கள் மீது முதலில் தாக்குதல் ஆரம்பித்ததாக கொரில்லாக்கள் தெரிவித்துள்ளனர்.

## கல்வி அமைச்சின் நிரந்தரச் செயலாளர் சிங்கப்பூர் சென்றார்

கோட்டை, ஞாயிறு

நாளை சிங்கப்பூரில் நடைபெறும் ஆசிய கல்வி அமைச்சர் மகாநாட்டில் இலங்கையின் சார்பில் கல்வி அமைச்சின் நிரந்தரச்செயலாளர் கலாநிதி பிரேமதாச உடுகம கலந்துகொள்கிறார்

இன்று பிற்பகல் சிங்கப்பூர் பயணமானார் இம்மகாநாட்டில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் கல்வி வளர்ச்சி பற்றி ஆராயப்படும்

......

## "பயன் தரும் கவிதைகள் வேண்டும்"

உடுப்பிட்டி, ஞாயிறு

"கவிதைகள் பொழுதுபோக்கானவையல்ல. கவிதை வாழ்வோடு ஒட்டிய கவிதைகள் தான் நாட்டின் இலக்கிய வளத்தை மேம்படுத்துகின்றன" என்று வடமராட்சி இலக்கிய வட்டக் கூட்டத்தில் பேசுகையில் கவிஞர் கருணையோகன் குறிப்பிட்டார்

பண்டிதர் திரு க வீரகத்தி தலைமைவகித்துப் பேசுகையில் "கவிஞர்களை ஊக்குவிப்பதின் மூலமே கவிதை வளத்தைப் பெருக்கமுடியும் நாட்டிற்கும் மொழிக்கும் பயன்படக்கூடியனவாகக் கவிதைகள் அமையவேண்டும்" என்று கூறினார்.

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் கிழக்கு வீரபத்திரர் சனசமூகநிலையத்தினர் வெள்ளிவிழா மலர் ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

## மரண அறிவித்தல்

ஜே. ரி. கனகரெட்ணம்

யாழ்ப்பாணம் 165, கஸ்தூரியார் வீதியில் வசிப்பவரும் கொழும்பு Health Public Engineers காரியாலயத்தில் கடமையாற்றுபவருமான திரு. ஜே. ரி. கனகரெட்ணம் காலம்சென்றுவிட்டார். இவர் திரு. வை. முருகேசுவின் மருமகனும், திருமதி ராசம்மாவின் கணவரும் செல்வன் ராம்பிரசாத், சிறீதரவின் தந்தையும், திரு த சுப்பிரமணியம், அருள்செல்வநாயகம் ஆகியோரின் சகோதரரும் திரு. மு. சுப்பிரமணியம் (C. T. B.) அவர்களின் மைத்துனருமாவார். அன்னாரது பூதவுடல் இன்று காலை 10 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

2491

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org